Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 · நடுநிலை நாளிதழ் · ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 147 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 29.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

## தமிழக சட்டமன்ற தேர்தல் 2026

# திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்கள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்




சென்னை:

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் (மார்ச் 28) வெளியிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் வரும் மார்ச் 30-ம் தேதி தொடங்குகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4- ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிவித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார்.

அதேபோல், அதிமுக சார்பில் போட்டியிடும் இரண்டாம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ளார். மொத்தம் 150 தொகுதிகளுக்கு அதிமுக தலைமை வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இன்னும் 17 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.

இதனிடையே, பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆளும்கட்சியான திமுகவின் வேட்பாளர்கள்பட்டியலைசென்னை தேனாம்பேட்டையில் உள்ள அக் கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் அக்கட்சியின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

அதன்படி, கொளத்தூர் தொகுதியில் மீண்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் மீண்டும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் போட்டியிடுகின்றனர்.

தற்போதைய அமைச்சர்கள் திருவெறும்பூரில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,திருச்சுழியில் தங்கம் தென்னரசு, அருப்புக்கோட்டையில் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மன்னார்குடியில் டி.ஆர்.பி. ராஜா, ஒட்டன்சத்திரம் சக்கரபாணி, தூத்துக்குடியில் கீதா ஜீவன், குறிஞ்சிப்பாடியில் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், திருச்செந்தூரில் அனிதா ராதாகிருஷ்ணன், குன்னத்தில் எஸ்.எஸ்.சிவசங்கர், முதுகுளத்தூரில் ராஜகண்ணப்பன்,துறைமுகத்தில் பி.கே.சேகர்பாபு, திருப்பத்தூரில் பெரியகருப்பன், சேலம் வடக்கில் ராஜேந்திரன், திருச்சி மேற்கில் கே.என். நேரு, காங்கேயத்தில் மு.பெ,சாமிநாதன், ஈரோடு மேற்கில் முத்துசாமி, ஆவடியில், ஆவடி நாசர், திருவிடைமருதூரில் கோவி.செழியன், திருவண்ணாமலையில் எ.வ.வேலு, மதுரை மத்திய தொகுதியில் முனைவர்.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ராசிபுரத்தில் டாக்டர்.மதிவேந்தன்,திட்டக்குடியில் சி.வி. கணேசன், காட்பாடியில் துரைமுருகன், ஆத்தூரில் ஐ.பெரியசாமி, ஆலங்குடியில் மெய்யநாதன், திருமயம் ரகுபதி உள்ளிட்டோருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கீழ்பென்னாத்தூரில் துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி, ராதாபுரத்தில் சபாநாயகர் அப்பாவு ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த முறை கரூர் தொகுதியில் போட்டியிட்ட செந்தில் பாலாஜி, தற்போது கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார்.

எனினும், தற்போதைய அமைச்சர்களான மனோ தங்கராஜ், காந்தி, கயல்விழி செல்வராஜ் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்,செஞ்சி தொகுதியில் போட்டியிடுகிறார். அதிமுகவின் கோட்டையான சேலம் தெற்கு தொகுதியில் புதுமுகமாக லோகநாதன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். திருக்கோயிலூரில் முன்னாள் எம்.பி.யும் முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மகனுமான டாக்டர். கௌதம சிகாமணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# உத்தரப் பிரதேசத்தில் நொய்டா சர்வதேச விமான நிலையம்

## பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்



லக்னோ:

உத்தரப் பிரதேசத்தின் ஜேவாரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முதல்கட்டத்தைப் பிரதமர் நரேந்திரமோடி இன்று திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிவில்விமானப்போக்குவரத்து அமைச்சர் கிஞ்சரபு ராம் மோகன் நாயுடு, உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் மற்றும் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த விமான நிலையத்தின் முதற்கட்டம் பொது தனியார் கூட்டாண்மை மாதிரியின் கீழ் சுமார் ரூ.11,200 கோடி மொத்த முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகத்தின்படி, தேசிய தலைநகர் பிராந்தியத்திற்கான ஒரு முக்கிய சர்வதேச நுழைவாயிலாகக் கருதப்படும் இந்த விமான நிலையம், நாட்டின் விமான நிலைய உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும், பிராந்திய மற்றும் சர்வதேச இணைப்பை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய படியாகும். டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்குத் துணையாக, நொய்டா சர்வதேச விமான நிலையம் டெல்லி என்சிஆர் பிராந்தியத்திற்கான இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக உருவாக்கப்பட்டுள்ளது. விமான நிலையங்களும் இணைந்து ஒருங்கிணைந்த விமானப் போக்குவரத்து அமைப்பாகச் செயல்பட்டு, நெரிசலைக் குறைத்து, பயணிகளைக் கையாளும் திறன் விரிவடையும். மேலும், டெல்லி என்சிஆரை உலகின் முன்னணி விமானப் போக்குவரத்து மையங்களில் ஒன்றாக நிலைநிறுத்தும். நொய்டா சர்வதேச விமான நிலையம், சாலை,ரயில்,மெட்ரோ மற்றும் பிராந்தியப் போக்குவரத்து அமைப்புகளுடன் தடையற்ற ஒருங்கிணைப்புடன் பலமுனை போக்குவரத்து மையமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது பயணிகள் மற்றும் சரக்குகளுக்குத் திறமையாக இணைப்பை உறுதி செய்யும் என இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்



மிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும் நாளையும் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு, எனினும் சற்று உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்இந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால்பகுதிகளில்வறண்ட வானிலைநிலவக்கூடும் என்று வானிலைமையம் தெரிவித்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிருஇடங்களில்நாளை இடி,மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வரும் 30ம் தேதி லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது. ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில்வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் வரும் 31ம் தேதி ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால்பகுதிகளில்வறண்ட வானிலைநிலவக்கூடும்

தமிழகம்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும் நாளையும் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு, எனினும் சற்று உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2-3° செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-25° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். மீனவர்களுக்கு எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# செய்யூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் ஆதரவு வேண்டும்

## அதிமுக வேட்பாளர் ராஜசேகர் வேண்டுகோள்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் பெரும்பாக்கம்ராஜசேகர்செய்யூர்சட்டமன்றத் தொகுதி பொது மக்களின் ஆதரவை வேண்டி இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க ஆதரவு கேட்டுள்ளார்.

அன்பு செய்யூர் தொகுதி மக்களே

நான் உங்கள் பெரும்பாக்கம் இ.ராஜசேகர் நான் செய்யூரின் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்செய்யூர் தொகுதி மண்ணின் விவசாயம், உழைப்பு, மக்களின் வாழ்க்கை மற்றும்

நீங்கள் படும் துயரங்கள் எல்லாம் எனக்கு நன்றாக தெரியும்.

செய்யூர்தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி விவசாயிகள், மீனவர்கள், உப்பள தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள் ஆகியோரின் கடின உழைப்புதான் இந்த மண்ணின் பலம். செழிப்பான செய்யூரை உருவாக்க, என் சிறப்பு திட்டங்களின் மூலம், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, விவசாயம், மீனவர் நலம், மகளிர் மேம்பாடு, விளையாட்டு இவற்றின் முன்னேற்றத்திற்காக நான் என்றும் உங்களுள் ஒருவனாகநின்று உங்களுக்காக பாடுபடுவேன்

என்று உறுதிகூறி, செய்யூர் தொகுதியில் உங்கள் ஆதரவை வேண்டுகின்றேன் என தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகத்தில் மீண்டும் அதிமுக வேட்பாளராக மரகதம் குமரவேல் கழக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

## நிர்வாகிகள் தொண்டர்கள் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரம் ,கருங்குழி பேரூர் கழகம், மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் படாளம்,

இப்பகுதியில் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளராக மரகதம் குமரவேல் அவர்களை மீண்டும் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளித்த அதிமுக கழக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களுக்கு மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கே சி சரவணன், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் விஜி குமரன், கருங்குழி பேரூர் கழக செயலாளர் ஆர்டி ஜெயராஜ், மதுராந்தகம் நகர கழக துணை செயலாளர் முத்து மற்றும் மதுராந்தகம் தொகுதி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி எடப்பாடி அவர்களுக்கு கழக நிர்வாகிகள் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில்

# 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் மாடுகள் பூட்டப்பட்ட தேர்தல் அலங்கார மாட்டுவண்டிகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணி



ஈரோடு மாவட்டம் திண்டல், அருள்மிகு ஸ்ரீ வேலாயுதசுவாமி திருக்கோவில் நுழைவுப்பகுதியில் (27.03.2026) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் மாடுகள் பூட்டப்பட்ட தேர்தல் அலங்கார மாட்டுவண்டிகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது என (15.03.2026) அன்று அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 8 சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது. ஈரோடு மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என அனைத்து தரப்பு வாக்காளர்களுக்கும் இந்த தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில்

100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் 99 - ஈரோடு மேற்குசட்டமன்றதொகுதி "எனது வாக்கு எனது உரிமை" 100 சதவீதம் வாக்களிப்போம் உள்ளிட்ட வாசகங்களுடன் மாடுகள் பூட்டப்பட்ட தேர்தல் அலங்கார மாட்டுவண்டிகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார். கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில்ஈரோடு மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பின் படி சுமார் 76 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றது. எனவே, அனைத்து தரப்பு மக்களுக்கும் வாக்களிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் வீட்டிற்கே சென்று வாக்குப்பதிவை பதிவு செய்திடவும். மேலும் தேர்தல் நேரத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கவும், பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள், காவல் துறை சார்ந்த அலுவலர்கள் என அனைத்து பொதுமக்களும் வாக்களிக்கவும் இத்தகைய நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் அனைத்து ஏற்பாடு செய்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 8 சட்டமன்ற தொகுதியிலும் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடு பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இப்பேரணியில் மாட்டின் உரிமையாளர்கள் 20 காளை மாட்டு வண்டிகளில் கையில் ஏந்தியபடி "தவறாமல் வாக்களிப்போம் தலைநிமிர்ந்து நடப்போம்" "வாக்களிப்பதில் பெருமை கொள்வோம்" "இந்திய ஜனநாயகத்தில் பங்கு பெறுவோம்" "உங்கள் வாக்கு உங்கள் உரிமை," "நாட்டின் எதிர்காலம் உங்கள் கையில் வாக்களிக்கத் தவறாதீர்கள்" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கையில் ஏந்தியபடி வழியெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

இப்பேரணியானது, திண்டல், அருள்மிகு ஸ்ரீ வேலாயுதசுவாமி திருக்கோவில் நுழைவு பகுதியில் தொடங்கி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை சென்று அடைந்தது.

இப்பேரணியின் போது, திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் கடையநல்லூர்சட்டமன்றஉறுப்பினர்செகிருஷ்ணமுரளிஎன்றகுட்டியப்பாஅறிவிக்கப்பட்டதையடுத்துசெங்கோட்டை நகரகழகம்சார்பில்பொதுமக்களுக்குஇனிப்புகள்வழங்கப்பட்டது,அதேபோலவடக்குமாவட்டசிறுபான்மைநலப்பிரிவு சார்பில் வடகரை வாவாநகரத்தில் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் தனியார் பள்ளியில் வாக்குப்பதிவு அலுவலருக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெறுவதை தொடர்ந்து 28/03 /2026 சனிக்கிழமை இன்று மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான எம்.எஸ்.பிரசாந்த், இஆப, அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

# பங்குனி உத்திரம் திருநாளை முன்னிட்டு சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றிய கிராம பொதுமக்கள் பாடியந்தல்



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் பாடியந்தல் கிராமத்தில் (28/03/2026 சனிக்கிழமை) வருகின்ற பங்குனி உத்திர திருநாளை முன்னிட்டு கிராம மக்கள் ஒன்றிணைந்து முருகருக்கான திருநாளில் தேர் ஊர்வலம் வரும் வழியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்பு இடங்களை கிராம மக்கள் அப்புறப்படுத்தி சாலையினை விரிவாக்கம் செய்தும் குண்டும் குழியுமாக உள்ள இடங்களை மண் கொட்டி சரி செய்தும் திருவிழாவிற்கான தேவையான ஏற்பாடுகளை கிராம மக்கள் ஒன்றிணைந்து செய்து வருகின்றனர்



தென்காசி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளராக சுரண்டை அருகே உள்ள சுப்பையாபுரம் கிராமத்தைச் சேர்ந்த டாக்டர் கலை கதிரவன் வேட்பாளராக அறிவிப்பு இவர் திமுக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை மகன் என்பது குறிப்பிடத்தக்கது



சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் ஈ.ராஜா வாசுதேவநல்லூர் தொகுதி திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்

### தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026.ஐ முன்னிட்டு

# ஈரோடு மாவட்டத்தில், தபால் வாக்குச்சீட்டு தொடர்பான ஆய்வுக்கூட்டம்





தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026.ஐ முன்னிட்டு, ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 27.03.2026 அன்று அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC), வேட்பு மனு தாக்கல் (Nomination), தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதியளித்தல் (Single Window System), ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு (MCMC), தேர்தல் செலவினம், தபால் வாக்குச் சீட்டு தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

செலவின இக்கூட்டத்தில், தேர்தல் செலவின கணக்குகளை பராமரிக்கும் விதிமுறைகள், வரம்புகள் மற்றும் கண்காணிப்பு செயல்முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. தேர்தல் விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதன் அவசியத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் வலியுறுத்தினார்.

அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றி, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், வேட்பு மனு தாக்கல் நடைமுறைகள், ஒற்றைச் சாளர முறை (Single Window System) மற்றும் சுவிதா செயலி (Suvidha App) மூலம் அனுமதி பெறும் செயல்முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC), ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு (MCMC), தேர்தல் செலவின விதிமுறைகள், தபால் வாக்குச்சீட்டு நடைமுறைகள், மற்றும் கணினியமயம், சைபர் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பாகவும் விளக்கப்பட்டது.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை சாலை வெள்ளோடு மாரியம்மன் கோவில் திடல் வளாகத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கும்மியாட்டம் மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

### மதுரை திருப்பரங்குன்றம் கிழக்குத் தொகுதி முழுவதும்

# சாலைகள் அமைத்து தரப்படும் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படும்

## கிழக்கு தொகுதி வேட்பாளர் மாங்குளம் மகேந்திரன் பேட்டி



மதுரை திருப்பரங்குன்றம் கிழக்குத் தொகுதி முழுவதும் சாலைகள் அமைத்து தரப்படும் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதியும் செய்து தரப்படும் கஞ்சா புழக்கத்தை முழுவதுமாக ஒழிக்கப்படும் என்று கிழக்கு தொகுதி வேட்பாளர் மாங்குளம் மகேந்திரன் பேட்டியளித்துள்ளார்

கிழக்கு தொகுதி முழுவதும் எங்கு பார்த்தாலும் சாலை வசதி இல்லை எங்கு பார்த்தாலும் ரோடு இல்லை என் மனைவி மாங்குளம் கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் வீடுகளுக்கு மாங்குளம் முழுவதும் கிராமத்தில் குடிநீர் இணைப்பு கொடுத்துள்ளும் அதேபோன்று கிழக்கு தொகுதி முழுவதும் குடிநீர் வசதியும் செய்து தரப்படும் எங்கு பார்த்தாலும் கஞ்சா புழக்கம் அதிகமாக உள்ளது கஞ்சாவை ஒழிப்போம் வருங்கால அமைச்சர் எடப்பாடி அவர்கள் அதற்கான தனியாக ஐடி விங்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது கஞ்சாவை ஒழிப்போம் மதுரை மாநகராட்சிக்கு எதிராக நாங்கள் தான் வழக்கு பதிவு செய்தோம் இதனைத் தொடர்ந்து ஊழலை ஒழிப்போம்

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி எப்படி இருந்தது அதேபோன்று எந்த இடத்திலும் அதே போன்ற ஆட்சி எடப்பாடி அமைப்பார் பெண்கள் கற்பழிப்பு கொலையோ இருக்காது அதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் கிழக்குத் தொகுதி அமைச்சர் மூர்த்தியின் தொகுதி என்ற கேள்விக்கு களம் என்பது அவர்பணத்தைமட்டுமே நம்பி இருக்கிறார்வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு இரண்டாம்நாள்நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வள்ளி, தெய்வானைசமேத சுப்பிரமணிய சுவாமி யானை வாகனத்தில் தேர்பவனி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பக்தியுடன் வழிபட்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை சென்கோப்டெக்ஸ் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நெசவாளர்களுடன் கலந்துரையாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



திருப்பூர் பி,என்,ரோடு மூன்றாவது வீதி ராம் நகர் உள்ள லாரி டிரான்ஸ்போர்ட் அலுவலகம் அமைந்துள்ளது இங்கு லாரிகள் நடு ரோட்டிலே நிறுத்திவிட்டு சென்று விடுகிறார்கள் இதனால் போக்குவரத்து மிகவும் பாதிப்பு ஆகியுள்ளது. தினந்தோறும் இதனால் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர் . இப்படி பொதுமக்களுக்கு இடியடி செய்யும் லாரி ஆபீஸ் அலுவலங்களில் மாநகர காவல் ஆணையாளர் இவ் விஷயத்தில் தலையிட்டு அதிகாரிகளுக்கு பிறப்பிப்பாரா ? அல்லது வடக்கு போக்குவரத்து துறை காவலர்கள் நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு இடம் செய்யும் லாரி ஆபீஸ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைக்கின்றனர் .




தென்காசி மாவட்டத்தின் எட்டாவது காவல் கண்காணிப்பாளராக மயில்வாகனன் ஐபிஎஸ் பதவி ஏற்று கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை சென்கோப்டெக்ஸ் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இராட்டையில் நூல்நூற்று தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு மாவட்டம் பவானி சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.எல்.ஏவுமானகருப்பண்ணன்போட்டியிடஉள்ளதாககட்சிதலைமைஅறிவித்தநிலையில்,கூட்டணிகட்சிநிர்வாகிகள் ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் உள்ள கருப்பண்ணன் இல்லத்தில் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து மலர் கொத்துக் கொடுத்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு, ஈரோடு மாநகர் அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமிதிருக்கோயில்நுழைவுபகுதியிலிருந்துமாவட்டஆட்சித்தலைவர்அலுவலகவளாகம்வரைநடைபெற்ற 99ஈரோடுமேற்குசட்டமன்றதொகுதிஎனதுவாக்குஎனதுஉரிமை100சதவீதம்வாக்களிப்போம்உள்ளிட்டவாசகங்களுடன் மாடுகள் பூட்டப்பட்ட தேர்தல் அலங்கார மாட்டுவண்டிகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்து, இருசக்கர வாகன ஓட்டுநர்களுக்கு துண்டு பிரசுரங்களை ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதிகுட்பட்ட மாநகராட்சி வ.உ.சி.பூங்கா விளையாட்டுமைதானத்தில்நந்தாநேச்சுரோபதிஆயுர்வேதாமற்றும்சித்தாகல்லூரியைச்சேர்ந்தமாணவ,மாணவியர்கள் பங்குபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை சாலை வெள்ளோடு மாரியம்மன் கோவில் திடல் வளாகத்தில்நடைபெற்றதேர்தல்தொடர்பானகும்மியாட்டம்மற்றும்விழிப்புணர்வுகலைநிகழ்ச்சிகளைபார்வையிட்டார்.

# கோவையில் முதன் முறையாக அதர்வா சுசூகி பெஸ்ட் வேல்யூ ஷோரூம் துவக்கம்




சுஸூகி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பழைய வாகன விற்பனைப் பிரிவாக துவங்கப்பட்டுள்ள இதில், சுசூகி நிறுவனத்தின் அனைத்து ரக பழைய இரு சக்கர வாகனங்கள் விற்பனை

சுஸூகி மோட்டார்சைக்கிள் இந்தியா நிறுவனம்,பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி விற்பனை செய்வதற்காக 'சுஸூகி பெஸ்ட் வேல்யூ' என்ற பெயரில் தனிப்பிரிவை நடத்தி வருகிறது.

இந்நிலையில் சுசூகி பெஸ்ட் வேல்யூ ஷோரூம் தனது அங்கீகரிக்கப்பட்ட அதர்வா டீலர் மூலமாக அதர்வா பெஸ்ட் வேல்யூ விற்பனை மையத்தை கோவையில் முதன் முறையாக செல்வபுரம் பகுதியில் துவங்கப்பட்டுள்ளதுஅதர்வா சுசுகியின் நிர்வாக இயக்குனர் ராஜூ தலைமையில் நடைபெற்ற இதற்கானதுவக்கவிழாவில், சுசூகி நிறுவனத்தின் விற்பனை மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு துணை தலைவர் தீபக் முத்ரேஜா மற்றும் சுசூகி பெஸ்ட் வால்யூவின் தேசிய தலைவர் சஞ்சய் யாதவ் ஆகியோர் இருவரும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு புதிய ஷோரூமை திறந்து வைத்தனர்...

சுசூகி பெஸ்ட் வேல்யூ குறித்து நிர்வாகிகள் கூறுகையில்,வாடிக்கையாளர்கள் தங்களின் பழைய சுஸூகி அல்லது மற்ற நிறுவன வாகனங்களை பெஸ்ட் வேல்யூவில் கொடுத்துவிட்டு, புதிய சுஸூகி வாகனங்களை 'எக்ஸ்சேஞ்ச்' முறையில் வாங்கிக் கொள்ளலாம்.

பழைய வாகனங்கள் சுஸூகி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மெக்கானிக்குகள் மூலம் வாகனம் முழுமையாகப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்படும் என தெரிவித்தனர்..

குறிப்பாக இந்த ஷோரூம்களில் விற்கப்படும் பழைய வாகனங்களுக்கு குறிப்பிட்ட காலம் வரை நிறுவனத்தின் உத்தரவாதம் வழங்கப்படுவதுடன்,சில குறிப்பிட்ட வாகனங்களுக்கு இலவச சர்வீஸ் சலுகைகளும் வழங்குவதாக தெரிவித்தனர்..

வாகனத்தின் தரம் மற்றும் நிலையைப் பொறுத்து வெளிப்படைத்தன்மையுடன் சரியான சந்தை விலை நிர்ணயிக்கப்படுவதால்,

பழைய வாகனங்களை விற்பனை செய்யும் போது தகுந்த விலை கிடைக்கும் என தெரிவித்தனர்..

மேலும் பழைய வாகனங்களை வாங்குபவர்கள் பெயர் மாற்றம் மற்றும் பிற ஆவண வேலைகளை ஷோரூம் ஊழியர்களே கவனித்துக் கொள்வதோடு,பழைய வாகனங்களுக்குக் கடன் வசதிகளை எளிமையாக பெற்று கொள்ளலாம் தெரிவித்தனர்.

# ஜான் பாண்டியனின் தமமுக கட்சி தாமரை சின்னத்தில் போட்டி





தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுகிறது. பிரதான எதிர்க்கட்சியானஅ.தி.மு.க. கூட்டணியில், அ.தி.மு.க. 167, பா.ஜ.க. 26,பா.ம.க.18,அ.ம.மு.க. 11, த.மா.கா. 5, புதிய நீதிக்கட்சி 2, இந்திய ஜனநாயக கட்சி 2, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் 1, புரட்சி பாரதம் 1, சிங்கத் தமிழர் முன்னேற்றகழகம் 1 என 234 தொகுதிகளிலும் களம் காண்கிறது.

இதன்படி அ.தி.மு.க. கூட்டணியில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் கட்சிக்கு ராஜபாளையம் தொகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. தமிழகபாஜகபொறுப்பாளர் பியூஷ் கோயல் தலைமையில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி இருந்தது.தேசிய ஜனநாயக கூட்டணியில், ஜான் பாண்டியனின் தமமுக கட்சி தாமரை சின்னத்தில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கட்சிகான வேட்பாளர் நாளை அறிவிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டசபை தேர்தலில் 33 இடங்களில் தாமரை சின்னம் களம் காண உள்ளது குறிப்பிடத் தக்கது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.